## DEPOSITION OF WITNESS

## (Chapter XXII Code of Criminal Procedure)

கோயம்புத்தூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், கோயம்புத்தூர்.

| | | | |
|---|---|---|---|
| அமர்வு வழக்கு எண். | 51/2012 | அரசு தரப்பு | அ.சா.20 |
| சாட்சியின் வாக்கு மூலம் | | எதிரி தரப்பு | |
| பெயர் | வெற்றிச்செல்வன் | ஜாதி | |
| தகப்பனார் பெயர் | | சமயம் | |
| கிராமம் | | வயது | |
| தாலூக்கா | | தொழில் | |

Solemnly affirmed in accordance with the provisions of act X 1873 of 28th day of January 2020.

முதல் விசாரணை

நான் தற்பொழுது கோவை மாநகரத்தில் சிறப்பு நுண்ணறிவு பிரிவில் உதவி ஆணையாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2009 ஆம் வருடம் கோவை மாநகர சிங்காநல்லூர் காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்த போது 10.11.2009 ஆம் தேதி காவல் நிலையத்தில் பொறுப்பில் இருந்த உதவி ஆய்வாளர் ஜெகநாதன் என்பவரிடம் சரண்யா என்பவர் அவருடைய தந்தை காணவில்லை என்று கொடுத்த புகாரினைப் பெற்று, சிங்காநல்லூர் காவல் நிலைய கு.எண்.964/2009 (Man missing) முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து எனது புலன் விசாரணைக்கு வைத்தார். அந்த முதல் தகவல் அறிக்கையினைப் பெற்று புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு சாட்சிகள் சரண்யா, சத்தியா, மதன், செல்வகுமார், பாலசுந்தரம், ரகுநாதன் ஆகியோர்களை விசாரித்து அவர்களின் வாக்கு மூலங்களைப் பதிவு செய்தேன். மறுநாள் உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் நான் கோப்பை நிலையத்தில் ஒப்படைத்துவிட்டு மருத்துவ விடுப்பில் சென்று பிறகு அங்கிருந்து மாறுதலாகி சென்று விட்டேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

காணாமல் போனதாக சொல்லும் ராஜு**,** கோவை மணி மேல்நிலைப்பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்து வந்து பணி ஓய்வு பெற்றிருந்தார் என்றால் சரிதான்**.** ராஜு தமிழ் ஆசிரியராக பணியாற்றினார் என்றால் சரிதான்**. 10.11.2009** ஆம் தேதிய புகாரில் காலதாமதம் பற்றி ஏதும் சொல்லவில்லை என்றால் சரிதான்**.** சென்னையிலிருந்து தகவல் கிடைக்கப் பெற்று கோவை வந்து புகார் கொடுத்ததாக சொல்லப்பட்டுள்ளது**.** காணாமல் போனதாக சொல்லும் ராஜுவுக்கு இரண்டு மகள்கள் என்றால் சரிதான்**.** ஒரு மகள் திருமணம் செய்விக்கப்பட்டு சென்னையில் வசித்து வந்தார்**.** மற்றொரு மகள் திருமணம் ஆகாமல் சென்னையில் படித்து வந்தார்**. Man missing** புகார் வரப்பெற்றவுடன் மாவட்ட குற்ற ஆவண காப்பகத்தில் **(DCRB)** தகவல் கொடுக்கவேண்டுமென்றால் சரிதான்**.** அதன்படி நான் இப்புகார் குறித்து மாவட்ட குற்ற ஆவண காப்பகத்திற்கு தகவல் கொடுத்துவிட்டு மறுநாள் விடுப்பில் சென்றேன்**.**

<u>மறு விசாரணை</u> இல்லை

ஒம்/வெற்றிச்செல்வன்